# நாலடியார் பயிற்றுவிக்கும் பொறையுடைமை

ம.ஆன்றிஷா,
*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
நெறியாளர்: முனைவர் ஜோ.பென்னி,
*தமிழ்த்துறை, தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில்-02.*

**ஆய்வுச்சுருக்கம்**

சங்கம் மருவியகாலத்தில் தோன்றிய நூல்கள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் எனப்படுகின்றன. மக்களின் இன்பவாழ்வு நிலையற்ற தன்மைக் கொண்டது என்பதைவலியுறுத்தி நீதிநூல்களைப் புலவர்கள் இயற்றினர். நீதிநூல்களுள் ஒன்று நாலடியார். இதில் தஞ்சையை ஆண்ட பெருமுத்தரையர்களைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. நாலடியார் வயது முதிர்ந்த பெரியோர்களுடன் நட்பு கொள்ளவலியுறுத்துகிறது. ஏனெனில் பெரியோர்களிடம் சிறியவர்களின் பிழைப்பொறுக்கும் தன்மை காணப்படுகிறது. வறுமைத்தாக்கி உயிர்விடும் நிலை ஏற்படும் போது அதை நீக்கும் குணமுடைய நண்பர்கள்களிடம் மட்டும் உதவி கேட்க வேண்டும். இல்லையெனில் வறுமையைப் பொறுத்து கொள்ள வேண்டும். பிறர்பழிக்கும் வகையில் கிடைக்கும் இன்பத்தைப் பெற்று அதனால் வரும்பழியினைப் பொறுத்தல் தகுதியற்றது ஆகும். வாழ்வின் தாழ்வில் பொறுத்திருத்தல் அவசியம். அச்சூழலில் பின்னுக்குத் தீங்குவிளை வித்தல்கூடாது.

**முன்னுரை**

உலகமக்கள்யாவரும் ஒழுக்க நெறியுடன் நலமுடன் சிறப்பான முறையில் வாழசான்றோர்களால் இயற்றப்பட்ட நூல்களே நீதிநூல்கள் ஆகும். இந்தநூல்கள் மனிதன் முக்காலத்திலும் துன்பமடையாமல் வாழநீதி கருத்துக்களைப் பாரபட்ச மின்றி அனைவருக்கும் எடுத்துரைக்கிறது. நடை முறை வாழ்வுக்கான நீதியை மட்டும் எடுத்துக் கூறாமல்மறுமையில் நற்பேற்றை அடைவதற்கான வழிகளையும் பகிர்கிறது. துன்பமில்லாவாழ்வை வாழ, வாழ்வில் செய்யக் கூடாத செயல்களையும் எடுத்துக்கூறுகிறது. இந்நூலைப் படிப்பதன்வாயிலாக பண்டையத்தமிழரின் சிறந்த ஒழக்கங்களைப் பற்றி அறிந்துக் கொள்ளலாம். இன்றைய வாழ்வில் பொறுமையின் பெருமையை உணராதகாரணத்தால் தான் மணமுறிவுகள், குடும்பப் பிரச்சனைகள் அதிகமாக ஏற்படுகிறது. வாழ்வு சாந்தமுடன் அமைய பொறுமையின் தேவைகுறித்த கருத்துக்களை அனைவருக்கும் எடுத்துரைப் பது சிறந்த வழியாகும்.

**திறவுச் சொற்கள்**

தேறல், பொறையுடைமை, நட்பு, வறுமை, நாலடியார்,

**பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்**

சங்கம் மருவியகாலத்தில் தோன்றிய நூல்களே பதினெண்கீழ்க்கணக்கு நூற்கள். அவற்றுள் அறத்தினைவலியுறுத்துகின்ற பதினொருநூற்களை நீதிநூற்கள் என்பர். சங்கம் மருவியகாலம் வரலாற்றில் இருண்டகாலமாக கொள்ளப்படுகிறது. இக்காலகட்டத்தில் களப்பிரருக்கும் உள்நாட்டு மன்னர்களுக்கும் போரும் பூசலுமாகவே இருந்தன. இதன் விளைவாக தமிழ் இலக்கியத்தின் கலை, பண்பாடுகள் சிதைவுற்றன. மக்களின் சங்ககால செல்வ செழிப்பான வாழ்வுதுவண்டது. மக்கள் தேறல் பருகி புலால் உண்டு இன்பவாழ்வில் திளைத்தனர். இன்பவாழ்வை விடுவிக்க பல்வேறு மதங்களால் நோன்பு வாழ்க்கை மேற்கொள்ளப்பட்டதை,

**"தேறல்பருகிப்புலால் உண்டு இன்பவாழ்வில் திளைத்த பழைய வாழ்க்கையை விடுத்துச் சமண பௌத்தமதச் செல்வாக்கால் பல்வேறு நோன்பு வாழ்க்கை மேற்கொள்ளப்பட்டது. நீதி இலக்கியம் பல்கிப்பெருக அதுவே காரணமாகும்".**

**(தமிழ் இலக்கிய வரலாறு,பக்-152)**

என்னும் வரிகள் எடுத்தியம் புகின்றன. கலை இலக்கிய நோக்கிலும், அரசியல் நோக்கிலும் இதனை இருண்ட காலம் என்பர்.

**நாலடியார்**

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று நாலடியார். இதில் நானூறுவெண்பாக்கள் உள்ளன. திருக்குறளைப் போலவே நாலடியார் மூன்று இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்பவை ஆகும். நாலடியாரைத் தொகுத்தவர் பதுமனார் என்னும் புலவர். இந்நூலின் சிறப்பு உணர்ந்து டாக்டர் ஜி.யு .போப் இதனை ஆங்கிலத்தில் மொழிப் பெயர்த்துள்ளார். இந்நூலில் தஞ்சையை ஆண்ட சிற்றரசர்களான பெருமுத்தரையர்களைப் பற்றியக் குறிப்பு காணப்படுவதை,

**"முதலாம் பரமேச்சுவர் மப்பல்லவன் காலத்தில் இவர்கள் சிறந்து விளங்கிய தாகக்கல் வெட்டு சான்று கிடைப்பதால் நாலடியார் கி .பி . ஏழாம் நூற்றாண்டினது எனப் பேராசிரியர் எஸ்.வையாபுரிப் பிள்ளை கூறுகிறார்".**

**(தமிழ் இலக்கிய வரலாறு,பக்-162)**

என்னும் வரிகள் விளக்கி நிற்கின்றன.

**பெரியோர் நட்பில் பொறையுடைமை**

இரு உள்ளங்களின் கருத்து ஒரு மித்த உணர்ச்சியே நட்பு எனலாம். அத்தகைய நட்புணர் வினைப் பெரியோர்களுடன் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அத்தகைய நட்பில் தவறிபிழை ஏற்படின் அதனைப் பெரியோர் மன்னிப்பர். ஏனெனில் பெரியவர்களிடம் சிறியவர்களின் பிழை பொறுக்கும் குணம் இயல்பாகவே காணப்படும்.

**"பெரியார் பெருநட்புக் கோடல் தாஞ் செய்த**
**அரிய பொறுப்ப வென்றன்றோ- அரியரோ**
**ஒல்லென் அருவி உயர்வரை நன்னாட**

**நல்ல செய்வார்க்குத்தமர்"** **(பதினெண் கீழ்க்கணக்கு,பக்-25)**

மேற்கண்ட பாடல்வரிகள் வாயிலாக இக்கருத்தை அறிந்து கொள்ள இயல்கிறது. பெரியவர்களிடம் காணப்படும் பொறுமை என்னும் நற்குணம் அந்த நட்பு பிரியாமல் தாங்கிக் கொள்ள வழிவகுக்கிறது. இத்தகைய பொறுமையின் சிறப்பினை,

**"மிகுதியான் மிக்கவை செய்தாரைத்தாம்தம்**
**தகுதியான் வென்று விடல்"** **(திருக்குறள்,பக்-32)**

**"சாந்தனையும் தஈயனவஏ செய்திடும்தாம் அவரை**
**ஆந்தனையும் காப்பார் அறிவுடையோர் -மாந்தர்**
**குறைக்குந்தனையும் குளிர் நிழலைத்தந்து**
**மறைக்குமாம் கண்டீர்மரம்"** **(நீதி நூல்கள், பக்-132)**

என்ற பாடல்வரிகள் சுட்டிக் காட்டுகின்றன.

### வறுமையில் பொறையுடைமை

அடிப்படை வாழ்வாதாரத்திற்குப் பொருள் இல்லா நிலைமையே வறுமை ஆகும். உண்பதற்கு உணவின்றி உடல் இளைத்து துன்பமான நிலையில் இருந்தாலும் வறுமையினைப் பற்றி பிறரிடம் பகிர்தல் கூடாது. வறுமையைப் பொறுத்துக் கொள்ளுதல் வேண்டும். வறுமையின் உச்சகட்ட நிலையான உயிர் விடும் நிலையிலும், தவிர்க்க இயலா சூழ்நிலையிலும் அவ்வறுமையினைப் பற்றி நீக்கவல்ல நண்பர்களிடம் மட்டுமே கூற வேண்டுமென்பதை,

**"வற்றி மற்றாற்றப் பசிப்பினும் பண்பிலார்க்**
**கற்றம் அறிய உரையற்க- அற்றம்**
**மறைக்குந்துணையார்க்குரைப்பவேதம்மைத்**
**துறக்குந்துணிவிலாதார்."** **(பதினெண் கீழ்க்கணக்கு,பக்-26)**

என்னும் பாடல்வரிகள் வெளிப்படுத்துகின்றன. வாழ்வின் கொடுமையான சூழ்நிலைகள் பொறுமை நிலையினைச் சோதிக்கும் என்பதை,

**"கொடிய வேதனைகளும் நெடிய சோதனைகளும் பொறையைச் சந்திக்க நேரும். அவற்றுள் எல்லாம் தளராமல் நின்று சாதித்துவருவோரே சாந்தசீலராய்தேர்ந்து வருகின்றனர்".**

**(திருக்குறள் குமரேச வெண்பா, பக்-204)**

என்கிறவரிகள் தெரியப் படுத்துகின்றன.

### தகுதியற்ற பொறையுடைமை

மனிதன் செய்யும் ஒவ்வொருகாரணகாரியங்களின் பலனையும் நன்மை, தீமை என சான்றோர்கள் பட்டியலிட்டு வைத்துள்ளனர். ஒருவன் செய்யும் செயல்களினால் உண்டாகும் இன்பம் பிழையில்லாமல் இருக்க வேண்டும். பிறர் பழிக்கும் வகையில் உண்டாகும் இன்பம் தகுதியற்றதாகும். பிறர் தூற்றும் வழியில் இன்பத்தைப் பெற்று விட்டு அதனால் வரும் பழியினைப் பொறுத்தல் தகுதியான பொறையுடமை இல்லை. இச்செய்தினை,

**"இன்பம் பயந்தாங்கிழிவு தலைவரினும்**
**இன்பத்தின் பக்கம் இருந்தைக்க - இன்பம்**
**ஒழியாமை கண்டாலும் ஓங்கருவிநாட!**
**பழியாகா ஆறேதலை." (பதினெண் கீழ்க்கணக்கு,பக்-26)**

என்ற பாடல்வரிகள் உணர்த்திநிற்கின்றன. தனிமனித ஒழுக்க நடத்தைக்கு ஒவ்வாத இன்பத்தை அனுபவித்து திளைக்கும் போது பிறர்தூற்றுவர். அதனைப் பொருட்படுத்தாமல் பொறுத்துக் கொண்டு மேலும் அச்செயலையே செய்தல் பொறுமையின் இழுக்கு ஆகும்.

**வாழ்வில் தேவைப் படும் பொறையுடைமைகள்**

அன்றாட வாழ்வில் ஏற்றம் இறக்கம், நன்மை தீமை என பலவிதமான சூழல்கள் ஏற்படும். அச்சுழல்களில் பொறுத்திருத்தல் என்பது வாழ்வின் அத்தியாவசியமான ஒன்றாகிறது. வாழ்க்கையில் ஒருவன் தாழ்ச்சி அடைந்து கெட்டாலும் பிறருக்கு தீமை செய்தல் கூடாது. தன் வாழ்வின் தாழ்விலும் பொறுமையினைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதை,

**"தான் கெடினும், தக்கார் கேடெண்ணற்கதன்னுடம்பின்**
**ஊன் கெடினும் உண்ணார்கைத் துண்ணற்க – வான் கவிந்த**
**வையகம் எல்லாம் பெறினும் உரையற்க**
**பொய்யோடிடைமிடைந்த சொல்" (பதினெண் கீழ்க்கணக்கு,பக்-26)**

என்னும் பாடல் வரிகள் வாயிலாக தெரிந்து கொள்ள முடிகிறது.

திருவள்ளுவர் மயிலாப்பூரில் வாசுகி அம்மையாருடன் இல்லறம் நடத்திவந்தார். பொருள் ஈட்டுவதற்காக நெசவுத்தொழில் செய்து நெய்த ஆடைகளை விலைப் படுத்திவந்தார். வழக்கப்படி நெய்ததுணிகளை விற்க சென்றார். இவரின் பொறுமை குணத்தினைக் கண்டு பொறாமைக் கொண்ட போத்தன் என்பவன் ஆடைவாங்குவது போலசாடை செய்தான். துணியின்விலையைக் கேட்கவள்ளுவர் ஒரு பணம் என்றார். அவன்துணியை இருதுண்டம் செய்து ஒன்றை உயர்த்தி இதன் விலை என்ன? சொல்லும் என்றான். கலங்காமல் அரைப்பணம் என்றார். கொடியவன் அதையும் இருக்கூறாக்கி ஒன்றை மட்டும் காட்டி இதன் விலை என்ன? என்றான். அதற்கும் பொறுமையாய் ஐயா கால் பணம் என்றார். அவன் அப்பணத்தைத் தந்து விட்டு துணியோடு அகன்றான். மீத துணி பயனற்றது ஆதலால் வீதியில் அதை எறிந்து விட்டு வள்ளுவர் வீடு சேர்ந்தார். பிறன் பிழை பொறுத்த தோடு உற்றதைக் கொண்டு உறுபசியும் தீர்த்தார். அச்செய்தியை,

**"நெய்த ஆடையை நேர்ந்து கிழித்தவன்**
**செய்த தீங்கைச் சிறிதும் மனங்கொளாது**
**உய்தி என்ன உறுவிலை கூறினார்**
**பொய்யில்வாயர் பொறுமை அரிதாரோ"**

**(திருக்குறள் குமரேச வெண்பா, பக்-213)**

என்றவரிகள் சுட்டிக்காட்டுகின்றன. உணவின்றி உடல் மெலிந்த கொடிய நிலையிலும் தன் வீட்டில் உணவு உட்கொள்ளாதவரின் வீட்டில் உணவு உட்கொள்ளுதல் கூடாது. அந்தவறுமையான சூழ்நிலையில் பொறுத்திருத்தல் வேண்டும். வானம் சூழ்ந்த இவ்வுலகம் முழுவதையும் கொடையாகப் பெறுவதாயினும் பொய் கலந்தச் சொற்களைப் பேசுதல் கூடாது. அத்தகைய சூழல் ஏற்பட்டாலும் பொறுமையினைக் கடைப்பிடிக்க வேண்டும். இச்செய்தியினை,

> **"பொல்லாதவார்த்தைகளைப் பேசுகிறவன் உயிரோடு இருந்தாலும் இறந்தவனே. அவற்றைப் பொறுத்துக் கொள்கிறவன் உலக பாசங்களைத்துறவா திருந்தாலும் யாவும் துறந்த பெரிய தவ முனிவனே. பொறை அரியதவத்தை அருளுகிறது".**
>
> **(திருக்குறள் குமரேச வெண்பா,பக்-243)**

என்றவரிகளும் உணர்த்தி நிற்கின்றன.

**முடிவுரை**

சிறிதளவு பொறுமை வாழ்வில் பெரியநன்மையினைப் பயக்கும். பொறுமை என்பது அமைதி என்பதல்ல, இக்கட்டான சூழல்களில் எவ்வாறு நடந்து கொள்கிறோம் என்பதன் வெளிப்பாடு ஆகும். பொறுமையைக்கையாள் வது என்பது எளிதானகாரியம் இல்லை. அது ஒரு கலை. தொடர்ச்சியான பயிற்சி மூலமாகவே அதனைக்கையாள முடியும். ஒரு முறை பொறுமையினை உணர்ந்தால் அதைவிட மனிதனுக்குச் சிறந்த ஆபரணம் எதுவும் இல்லை. இன்றையவேகமான உலகில் குடும்ப உறவுகளில் சிக்கல்கள், சமூகத்தில் நிகழும் கொலைகள், தற்கொலைகள் அனைத்திற்கும் அடிப்படைகாரணம் பொறுமை என்ற பண்பு நலன் இன்மையே ஆகும். சிறுவயதிலிருந்து நீதிநூல்களைக் கற்பித்து அதன் படி நடக்க அறிவுறுத்துவதன் வாயிலாக நல்ல மனிதகுலத்தினை உருவாக்க இயலும். அடுத்த தலைமுறையினருக்குப் பொறுமையாக இருத்தலின் அவசியம் மற்றும் நன்மைகளை எடுத்துக் கூறிப்பழக்கப் படுத்துவதன் வாயிலாக வளமான சமூகத்தினை உருவாக்கலாம்.

**துணைநூற்பட்டியல்**

[1] கீர்த்தி, நீதிநூல்கள், அருணாபப்ளிகேஷன்ஸ், எட்டாம்பதிப்பு - 2019.

[2] தமிழமுது,பதினெண் கீழ்க்கணக்கு-1, மாணவர்பதிப்பகம், சென்னை,முதற்பதிப்பு -2009.

[3] தமிழண்ணல், புதியநோக்கில்தமிழ்இலக்கியவரலாறு, மீனாட்சிபுத்தகநிலையம், மதுரை, முப்பத்திரண்டாம்பதிப்பு - 2014.

[4] நாராயணசாமி (உ.ஆ), திருக்குறள், நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ் (பி) லிட், சென்னை, இருபதாம்பதிப்பு - 2019.

[5] ஜெகவீரபாண்டியனார், திருக்குறள்குமரேசவெண்பா, வர்த்தமானன்பதிப்பகம், இரண்டாம் பதிப்பு - 2018.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*